இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 81 – ஒலி : 281 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – வைகாசி 08 – திங்கள்கிழமை 22 மே 2023 – திருச்சி★★ 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 81 - Issue 281: Thiruvalluvar Year - 2054 - Vaikasi 08 - Monday 22 May 2023 - Trichy★★ 8 Pages ₹ 5.00



பெங்களூருவில், நேற்று முன்தினம் (20.5.2023) கர்நாடக மாநில முதலமைச்சராக சித்தராமையா அவர்கள் பதவியேற்ற விழாவில், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, காங்கிரஸின் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி, பீகார் மாநில முதலமைச்சர் நிதீஷ் குமார், ராஜஸ்தான் மாநில முதலமைச்சர் அசோக் கெலாட், ஜார்க்கண்ட் மாநில முதலமைச்சர் ஹேமந்த் சோரன், பீகார் மாநில துணை முதலமைச்சர் தேஜஸ்வி யாதவ், ஜம்மு காஷ்மீர் முன்னாள் முதலமைச்சர்கள் உமர் அப்துல்லா மற்றும் திருமதி மெகபூபா முப்தி, மகாராஷ்டிரா மாநில முன்னாள் முதலமைச்சர் சரத்பவார், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் சீதாராம் யெச்சூரி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் டி.ராஜா மற்றும் பல்வேறு மாநிலங்களின் அரசியல் தலைவர்கள் கலந்து கொண்டனர்.

## கர்நாடக மாநில

# முதலமைச்சராக சித்தராமையா பதவியேற்றார்!

## விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் – ராகுல்காந்தி – பிரியங்கா காந்தி – அனைத்துக் கட்சித் தலைவர்கள் பங்கேற்பு!

**பெங்களூரு, மே 22-**

**கர்நாடக மாநிலத்தில் முதலமைச்சர் சித்தராமையா தலைமையிலான காங்கிரஸ் அரசு நேற்று முன்தினம் பதவியேற்றுக்கொண்டது. பதவியேற்பு விழாவில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், ராகுல்காந்தி அவர்கள் உள்ளிட்ட ஏராளமான தலைவர்கள் பங்கேற்றனர்.**

கர்நாடக சட்டசபை தேர்தலில் காங்கிரஸ் கட்சி 135 தொகுதிகளை கைப்பற்றி அமோக வெற்றி பெற்றது.

இதையடுத்து சித்தராமையா கர்நாடக முதலமைச்சராகவும், டி.கே.சிவக்குமார் துணை முதலமைச்சராகவும் அறிவிக்கப்பட்டனர். பின்னர் பெங்களூருவில் நடந்த காங்கிரஸ் எம்.எல்.ஏ.க்கள் கூட்டத்தில் சித்தராமையா சட்டசபை காங்கிரஸ் கட்சி தலைவராக போட்டியின்றி ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அதைத்தொடர்ந்து சித்தராமையா, டி.கே.சிவக்குமார் ராஜ்பவனுக்கு நேரில் சென்று ஆளுநர் தாவர்சந்த் கெலாட்டை சந்தித்து ஆட்சி அமைக்க உரிமை கோரினர். அதை ஏற்று ஆட்சி அமைக்க வரும்படி ஆளுநர் அழைப்பு விடுத்து கடிதத்தை சித்தராமையாவிடம் வழங்கினார்.

அதன்படி கர்நாடக முதலமைச்சராக சித்தராமையா பதவி ஏற்கும் விழா நேற்று முன்தினம் (சனிக்கிழமை) மதியம் 12.30 மணிக்கு கன்டீரவா ஸ்டேடியத்தில் நடைபெற்றது.

பதவியேற்பு விழாவை பா.ஜ.க.விற்கு எதிரான அனைத்துக்கட்சிகளின் ஒருங்கிணைப்பு நிகழ்வாக ஆக்கும்பொருட்டு நாடு முழுவதுமுள்ள பா.ஜ.க. அல்லாத கட்சித்தலைவர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. தலைவர்களின் வருகையால் காலை முதலே பெங்களூரு கன்டீரவா மைதானம் விழாக்கோலம் பூண்டது. தலைவர்களின் பாதுகாப்பு கருதி சுமார் இரண்டாயிரம் போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். பல்லாயிரக்கணக்கான மக்கள் விழா அரங்கிற்கு வந்திருந்தனர்.

விழா அரங்கிற்கு வந்த தி.மு.க. தலைவர் - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை சித்தராமையா, டி.கே.சிவகுமார் ஆகியோர் ஆரத்தழுவி அன்புடன் வரவேற்றனர். தி.மு.க. மக்களவை குழுத் தலைவர் டி.ஆர்.பாலு, முதலமைச்சருடன் பங்கேற்றார்.

காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, ராகுல் காந்தி, பிரியங்கா காந்தி, தேசியவாத காங்கிரஸ் தலைவர் சரத்பவார், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சீதாராம் யெச்சூரி, பீகார் முதலமைச்சர் நிதிஷ்குமார், ராஜஸ்தான் முதலமைச்சர் அசோக் கெலாட், சத்தீஷ்கர் முதலமைச்சர் பூபேஷ் பாகல், இமாச்சல் முதலமைச்சர் சுக்விந்தர் சிங் சுக்கு, பீகார் துணை முதலமைச்சர் தேஜஸ்வி யாதவ், காஷ்மீர் முன்னாள் முதலமைச்சர்கள் பரூக் அப்துல்லா, மெஹபூபா முப்தி, விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன் எம்.பி. உள்ளிட்ட தலைவர்களும், மக்கள் நீதிமையம் தலைவர் நடிகர் கமல்ஹாசன், நடிகர் சிவ ராஜ்குமார் உள்ளிட்ட பிரபலங்களும் பதவியேற்பு விழாவில் பங்கேற்றனர்.

முதலமைச்சர் சித்தராமையா, துணை முதலமைச்சர் டி.கே.சிவகுமார் இருவருக்கும் ஆளுநர் தாவர் சந்த் கெலாட் பதவிப்பிரமாணமும், ரகசிய காப்பு பிரமாணமும் செய்து வைத்தார். கூடியிருந்த ஆயிரக்கணக்கான தொண்டர்களின் பலத்த கையொலி ஆரவாரத்திற்கிடையே இருவரும் பதவியேற்றுக்கொண்டனர். அவர்களுக்கு ஆளுநர் பூங்கொத்து கொடுத்து வாழ்த்துத் தெரிவித்தார்.

### 8 அமைச்சர்களும் பதவியேற்பு!

இதைத் தொடர்ந்து எம்.பி. பாட்டீல், ஜி.பரமேஸ்வரா, பிரையங் கார்கே, கே.ஹெச்.முனியப்பா, ஜமீர் அகமது கான், கே.ஜே.ஜார்ஜ், ராமலிங்க ரெட்டி மற்றும் சதீஷ் ஜாரகிஹோலி ஆகிய எட்டு பேர் அமைச்சர்களாகப் பதவியேற்றுக் கொண்டனர். கர்நாடகாவின் 24வது முதலமைச்சராக சித்தராமையா பதவியேற்றுள்ளார். அவர் கர்நாடக முதலமைச்சராவது இது 2வது முறையாகும்.

### சென்னையில் வெயில் தொடர்ந்து அதிகரிப்பு!

*சென்னை: மே 22 -*

*தமிழ்நாட்டில் இந்த ஆண்டு கோடைவெயில் வாட்டி எடுத்து வருகிறது. குறிப்பாக சென்னையில் வெயிலின் தாக்கம் பல மடங்கு அதிகரித்து காணப்படுகிறது. இதனால் பகல் நேரங்களில் வெளியில் தலை காட்ட முடியாத அளவுக்கு வெப்பம் அதிகமாகவே உள்ளது. இனிவரும் நாட்களிலும் வெயிலின் தாக்கம் மேலும் அதிகரிக்கும் என்றே வானிலை மையம் கணித்துள்ளது.*

*கடந்த சில நாட்களுக்கு முன்பு வங்கதேசத்தை தாக்கிய புயலின்போது 240 கி.மீ வேகத்தில் கடுமையான காற்று வீசியது. இது தமிழ்நாட்டுக்கு வர வேண்டிய மேகங்களை இழுத்துச்சென்றுள்ளது. இதன் காரணமாகவே இயல்பை விட அதிக வெயில் காணப்படுகிறது. இதனால் தான் 100 டிகிரியை தாண்டி வெப்பம் பதிவாகி வருகிறது. கடலோர பகுதிகளில் வீசும் கடல் காற்றால் சென்னை போன்ற கடலோர மாவட்டங்களில் வெப்பம் குறைய வாய்ப்பு உள்ளது. உதாரணத்துக்கு சென்னையில் பகல் 11 மணிக்கு கடல் காற்று வீசினால் அது நகர பகுதிகளில் வெப்பத்தின் தாக்கத்தை பகல் நேரத்தில் ஓரளவுக்கு குறைக்கலாம்.*



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (20.5.2023) பெங்களூருவில், கர்நாடக மாநில முதலமைச்சராகப் பதவியேற்றுக் கொண்ட சித்தராமையா அவர்களுக்கு வாழ்த்துத் தெரிவித்தார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (20.5.2023) பெங்களூருவில், கர்நாடக மாநில துணை முதலமைச்சராகப் பதவியேற்றுக் கொண்ட டி.கே.சிவகுமார் அவர்களுக்கு பொன்னாடை அணிவித்து, நினைவுப் பரிசு வழங்கி வாழ்த்துத் தெரிவித்தார்.